# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2007/37 - 2017 පෙබරවාරි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.02.23

*2007/37 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ. 9/ 73 (xii)*

***(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்***

*2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*(469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட காணி இடப்பரப்பை, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சரணாலயம் ஒன்றாகவிருப்பதாக இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன் என்பதுடன், அத்தகைய சரணாலயம் ''கொட்டுஅத்தாவல சரணாலயம்'' என அழைக்கப்படுதலும் அறியப்படுதலும் வேண்டுமென மேலும் வெளிப்படுத்துகின்றேன்.*

*காமினி ஜயவிக்ரம பெரேரா,*
*நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2017, பெப்புருவரி 02.*

***அட்டவணை***

*கொட்டுஅத்தாவலச் சரணாலயத்தின் எல்லைகள்*

*வடமேல் மாகாணம் குருநாகல் நிர்வாக மாவட்டத்தில் நிக்கவெரட்டிய பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதும், பரப்பளவில் 35 ஹெக்டெயார்களைக் கொண்டதும் பின்வருமாறு நிலஅளவையாளர் திணைக்களத்தின் 1:50,000 என்ற தேசப்பட விகிதத்துக்கிணங்க எஸ்எல்டி 99 ஆயத்தொலை முறைமையிலிருந்து பெறப்படுகின்ற ஜீபீஎஸ் ஆயத்தொலைகளினால் எல்லைப்படுத்தப்பட்டதுமான அக்காணிப்பரப்பு அடங்கலும் :-*

*வடக்கு :* *கிழக்குப்புறமாக அமைந்துள்ள ஆயத்தொலைகள் E 128078 N 288076 என்பவற்றின் புள்ளியிலிருந்து தொடங்கி, அமைந்துள்ள ஆயத்தொலைகள் E 128063 N 288198 என்பவற்றின் புள்ளிவரை ; அங்கிருந்து வடகிழக்குப்புறமாக அமைந்துள்ள ஆயத்தொலைகள் E 127897, N 288242 என்வற்றின் புள்ளிவரை ;*

கிழக்கு : தென் கிழக்குப்புறமாக வடக்கெல்லையின் கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து அமைந்துள்ள ஆயத்தொலைகள் E *127764* N *288270* என்பவற்றின் புள்ளிவரை; அங்கிருந்து தென்மேற்குப்புறமாக அமைந்துள்ள ஆயத்தொலைகள் E *127508* N *288352* என்பவற்றின் புள்ளிவரை ;

தெற்கு : வடமேற்குப்புறமாக கிழக்கெல்லையின் கடைசியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து அமைந்துள்ள ஆயத்தொலைகள் E *127409* N *288295* என்பவற்றின் புள்ளிவரை அங்கிருந்து மேற்குப்புறமாக அமைந்துள்ள ஆயத்தொலைகள் E *127476* N *288380*, E *127565* N *288450*, E *127719* N *288788* என்வற்றின் புள்ளிவரை; தென்மேற்குப்புறமாக அமைந்துள்ள ஆயத்தொலைகள் E *127911* N *288748* என்பவற்றின் புள்ளிவரை ;

மேற்கு : வடகிழக்குப்புறமாகத் தெற்கெல்லையின் கடைசியாகக் குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து அமைந்துள்ள ஆயத்தொலைகள் E *128160* N *288751* என்பவற்றின் புள்ளிவரை; அங்கிருந்து வடகிழக்குப்புறமாக அமைந்துள் ஆயத்தொலைகள் E *128359* N *288445* என்பவற்றின் புள்ளிவரை; அங்கிருந்து வடகிழக்குப்புறமாக அமைந்துள்ள ஆயத்தொலைகள் E *128078* N *288076* என்பவற்றின் புள்ளிவரை.


Kotuaththawala Sanctuary
126800
127200
127600
128000
128400
128800
289200
288800
288400
288000
287600
Malabendiyawa
Heenthambale
Olupeliyawa
47.0
Legend
Sanctuary Boundary ( Area 35 ha )
GPS Point
Tank
N
SCALE 1:12,000
GIS Unit
Department of Wildlife Conservation

3- 382